இந்திய சமுதாயத்தின் இதயக்குரல்

# மக்கள் ஓசை

HARIAN TAMIL MAKKAL OSAI SUARA RAKYAT
PP 6926/10/2012 (030956)

30.10.2024 WEDNESDAY புதன் *Daily Readers 440,000 | *Sunday Readers 527,000 RM2.00

■ மக்கள் 35 ஓசை 316 ■ திருவள்ளுவர் ஆண்டு 2055 ■ ஸ்ரீ குரோதி ஆண்டு ஐப்பசி 13 ■ ஹிஜ்ரி 1446 ■ ரபியுல் ஆகிர் 27

மேலும் பல செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்து **மக்கள் ஓசையின்** வலைத்தளத்தை (website) வலம் வரலாம்.







புன்சிரிப்புடன் தீபத் திருநாளை வரவேற்கும் என். தினித்ரா, எம். கோபிகாஸ்ரீ, எஸ்.மீனலோஷினி, டபிள்யு. சீவேதா, எஸ்.யோஷினி, டி. சந்தியா ஆகியோர்.

படம்: பி. மலையாண்டி

நாளை 31ஆம் தேதி மடானி தீபாவளி

## திறந்த இல்ல உபசரிப்பு

பிரதமர் சிறப்பு வருகை



கோலாலம்பூர்,அ க். 30- பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையில் 2024 மடானி தீபாவளி பொது உபசரிப்பு நாளை அக்டோபர் 31ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 தொடங்கி பகல் 2 மணி வரையில் செந்தூல் டிப்போட், கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது. இந்த தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பில் திரளாகக் கலந்துகொள்ளும்படி பொது மக்கள் அழைக்கப்படுகிறார்கள். இந்த 2024 மடானி தீபாவளி பொது உபசரிப்புக்கு டிஜிட்டல் துறை அமைச்சு ஏற்பாடு செய்திருக்கிறது.



## எதிர்கால நல்வாழ்விற்கு ஒற்றுமையைப் பேணுவோம்

டத்தோஸ்ரீ ரமணன்

கோலாலம்பூர், அக். 30- இந்திய சமூக அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தி நிலைப்படுத்த இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என தொழில்முனைவோர் மேம்பாடு, கூட்டுறவுத்துறைத் துணை அமைச்சர் டத்தோஸ்ரீ ஆர். ரமணன் தமது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கருத்துரைத்தார். எதிர்காலம், நம்பிக்கையை உறுதிசெய்ய குறிப்பாக

பக்கம் 4



## ஒற்றுமை ஓங்கட்டும் சமுதாயம் மேன்மையுறட்டும்

– டத்தோ சுந்தர்

மலேசிய இந்திய சமுதாயம் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெறுவதற்கு ஒற்றுமை மிகவும் அவசியம். ஒற்றுமை வழி நாம் அடையக்கூடிய வெற்றிகள் ஏராளம் என்று மக்கள் ஓசை இயக்குநர் டத்தோ சுந்தர் டான்ஸ்ரீ சுப்ரமணியம் கூறினார். ஆரோக்கியமற்ற விவகாரங்களில் ஈடுபட்டு சமுதாயத்திற்குத் தலைக் குனிவை ஏற்படுத்தும் போக்கை இளைய சமுதாயம் முற்றாகக் கைவிட வேண்டும். பெற்றோருக்கு உரிய மரியாதை

பக்கம் 4



## சுபிட்சம் பெருகட்டும் நல்வாழ்க்கை மலரட்டும்

- டத்தோ கோபி

தீபங்கள் ஒளியில் நம்மைப் பிடித்திருக்கும் இருள் அகன்று சுபிட்சம் பெருகி நல்வாழ்க்கை மலரட்டும் என்று மக்கள் ஓசை தலைமைச் செயல் அதிகாரியும் இயக்குநருமான டத்தோ எஸ். கோபால கிருஷ்ணன் (கோபி) தம்முடைய தீபாவளிச் செய்தியில் குறிப்பிட்டார்.

துன்பங்கள் விலகி செல்வச் செழிப்புடன் நம் சமுதாயம் குறிப்பாக மக்கள் ஓசை வாசகர்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டும்.

பக்கம் 4



## இந்திய சமூகம் வளம் பெறட்டும்

- மஇகா தேசியத் தலைவர் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன் தீபாவளி வாழ்த்து

கோலாலம்பூர், அக். 30- தீபத்திருநாளைக் கொண்டாடும் மலேசியா வாழ் இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துத் தெரிவித்துள்ளார் மஇகா தேசியத் தலைவர் டான்ஸ்ரீ டத்தோஸ்ரீ ச.விக்னேஸ்வரன். தீபாவளிப் பண்டிகையை நாம் அனைவரும் முழு ஈடுபாட்டுடன் கொண்டாட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

பக்கம் 4



## இருள் நீங்கி ஒளி வீசட்டும்

- மஇகா தேசியத் துணைத்தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் எம். சரவணன்

தீபத்திருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடும் மலேசியர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். இருள் நீங்கி ஒளிபிறக்கும் இந்நன்னாளில் அனைவரும் மகிழ்ச்சியாக, உறவுகளோடு இணைந்து தீபாவளியைக் கொண்டாடுவோம்.

தீபாவளியின் பின்னணியாக பல இதிகாசங்களும் புராணக் கதைகளும் இருந்தாலும் தீபாவளியைக் கொண்டாடும் வகையில் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் என்று

பக்கம் 4

### வாழ்த்து

அன்பு வாசகர்கள், பத்திரிகை விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கு மக்கள் ஓசையின் இனிய தீபத்திருநாள் வாழ்த்துகள்.

### விடுமுறை

தீபாவளியை முன்னிட்டு இன்று 30ஆம் தேதியும் நாளை 31ஆம் தேதியும் மக்கள் ஓசை அலுவலகத்திற்கு விடுமுறை என்பதால் அக்டோபர் 31ஆம் தேதியும் நவம்பர் முதல் தேதியும் மக்கள் ஓசை வெளிவராது. நவம்பர் 2ஆம் தேதி மக்கள் ஓசை வழக்கம்போல் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



